**இலங்கை அணுசக்தி சபை - 2018**

---

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இலங்கை அணுசக்தி சபையயின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து இலங்கை அணுசக்தி சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டினைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்தது என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தன என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 76 மற்றும் 80 ஆம் பந்திகளிற்கு முரணாக 02 ஆண்டுகள் தொடக்கம் 06 ஆண்டுகள் வரை முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 568,616 தொகையான மூன்று சொத்துக்களின் மீதிகள் மற்றும் | கருத்துரை வழங்கப்படவில்லை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் 12 மாதங்களினுள் தேறுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 173,600 பொறுப்பு மீதி என்பன 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்தன. | | வேண்டியதுடன் அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் 12 மாதங்களினுள் தீர்ப்பனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொறுப்புக்கள் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 14(அ) பந்திக்கு முரணாக கணக்குகளிற்கு சொத்துக்கள் 2 தடவைகள் எடுக்கப்பட்டிருந்ததால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 12,421,682 ஆல் அதிகரித்தும் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 954,575 ஆல் அதிகரித்தும் திரண்ட நிதியம் ரூபா 11,467,107 ஆல் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்து உருப்படியுடன் இணைந்த சாத்தியமான எதிர்கால பொருளாதார நலன்கள் அல்லது சேவைகள் நிறுவனத்திற்கு கிடைப்பது சாத்தியமானால் சொத்து உருப்படியின் கிரயம் சொத்தொன்றாக இனங்காணப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தால் அவ் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டிருக்காததால் நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 54,717,921 கிரயமான பூச்சிய புத்தகப் பெறுமதியையுடைய 619 சொத்து உருப்படிகள் காணப்பட்டன. அதற்கிணங்க மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் அதற்கிணங்க மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்திக்கு முரணாக செயற்படும் நிலைமைக்கு கொண்டுவரப்பட்டிருக்காத சொத்தொன்று தொடர்பாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,845,320 தொகை பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. இதன் விளைவாக நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிதியம் என்பன அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்துக்கள் பயன்பாட்டிற்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும் போது உதாரணமாக, முகாமைத்துவத்தால் குறிப்பிடப்பட்டவாறு செயற்பாட்டிற்கு கிடைக்கக்கூடியவாறு அதற்கு தேவையான இடம் மற்றும் நிலைமை காணப்படும் போது அவற்றின் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் சம்பள ஏற்றம், கழிவு வீதம் மற்றும் ஊழியர் புரள்வு மற்றும் ஏனைய யதார்த்தமான எடுகோள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு ஊழியத்தின் பின்னரான நலன்களிற்கான ஏற்பாட்டை மேற்கொள்வதற்காக கொள்கையொன்று தயாரித்துப் பெறப்பட வேண்டும். மீளாய்வாண்டின் போது சபையால் 157 ஊழியர்களிற்கு நலன்களாக ரூபா 6,616,165 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் ஊழியத்தின் பின்னரான நலன்களிற்கான ஏற்பாட்டை கணிப்பீடு செய்வதற்காக கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் ஊழியத்தின் பின்னரான நலன்களிற்கான ஏற்பாட்டை கணிப்பீடு செய்வதற்காக கொள்கையொன்று தயாரித்துப் பெறப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இலங்கை அணுசக்திச் சபையின் பழைய பிரதான கட்டிடம் தொடர்பாக முதல் நான்கு மாதங்களிற்காக ரூபா 3,182,045 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததால் மூலதன மானிய மீதி மற்றும் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி என்பன அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை | சொத்தின் பெறுமானத்தேய்விடக்கூடிய பெறுமதி சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் ஊடாக முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் ஆய்வுகூடங்களில் காணப்பட்ட சொத்துக்கள் அதாவது 305 இரசாயன உபகரணங்கள், 04 இரசாயனப் பொருட்கள், 2017 ஆம் ஆண்டில் ஜீரீஆர்ஜ செயற்திட்டத்திலிருந்து இலங்கை கமா (GAMMA) நிலையத்திற்கு பெறப்பட்டிருந்த பாதுகாப்பு முறைமைக்குச் சொந்தமான உபகரணங்கள், சர்வதேச அணுசக்தி முகவரிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்டிருந்த ரூபா 2,830,191 பெறுமதியான விஞ்ஞானவியல் உபகரணம் மற்றும் இலங்கை அணுசக்திச் சபையின் பழைய கட்டிடத்தை அகற்றுவதற்காக வீதி | கருத்துரை வழங்கப்படவில்லை | உரிய சொத்துக்களின் கிரயம் சரியாக மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்டு 2018 ஏப்ரல் 24 இலிருந்து பயன்பாடுத்தப்படுகின்ற புதிய கட்டிடம் என்பன மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை அணுசக்திச் சபையின் அழிவு எதிர்ப்பு பரிசோதனைக்கான தேசிய நிலையத்தின் (National Centre for Non Destructive Testing) கட்டிட நிர்மாணிப்புத் தொடர்பாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை காணி மீட்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 7,088,994 பிடிபணம் தொடர்பாக ரூபா 850,679 தொகையான செலுத்த வேண்டிய வற் (VAT) கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு முறையாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 போதியளவு அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | போதியளவு அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்களின் விபரம் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அணுசக்தி அதிகாரசபைக்கான மீள்கட்டமைப்பு பரிந்துரைகள் மற்றும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை என்பன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் முறையே 2010 மே 25 மற்றும் 2011 சனவரி 13 இல் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. இருந்த போதிலும் அந் நடைமுறைக்கு முரணாக 2012 மே 23 இல் எடுக்கப்பட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கிணங்க முன்னைய ஆட்சேர்ப்பு நடைமுறையை அடிப்படையாகக் கொண்டு 22 உத்தியோகத்தர்களிற்கு ஒன்று அல்லது இரண்டு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் 2005 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் அல்லது அதன் பின்னர் ஆண்டொன்றிற்கு அப் பதவியுயர்வுகளை அடிப்படையாகக் கொண்டு சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன. | அவதானிக்கப்பட்ட விடயங்கள் மேலதிக படிமுறைகளிற்காக பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையான அதிகாரமில்லாமல் பதவியுயர்வுகள் வழங்கப்படக் கூடாததுடன் நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முன்னாள் அணுசக்தி அதிகாரசபைக்கு எதிராக 2010 ஆம் ஆண்டில் ஊழியரொருவரால் எஸ்சீ/எவ்ஆர்/இல.662/2010 ஆம் இலக்க வழக்கு தொடரப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபையின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றத்தில் இவ்வழக்கு தொடர்பாக அனைத்து பிரதிவாதிகள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்பவற்றின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்ளாமல் வாதிக்கு 2006 ஆம் ஆண்டிலிருந்து எம்எம் சம்பளக் குறியீட்டிலுள்ள சம்பள அளவுத்திட்டம் ஒன்றை செலுத்துவதற்கு சபை இணங்கியிருந்தது. அரசாங்கத்திற்கு தீமைகளை ஏற்படுத்தும் வகையில் பணிப்பாளர் சபையால் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன. | அவதானிக்கப்பட்ட விடயங்கள் மேலதிக படிமுறைகளிற்காக பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையான அதிகாரமின்றி தீர்மானங்கள் எடுக்கப்படக் கூடாததுடன் அரசாங்கத்திற்கு தீமைகளை ஏற்படுத்துமாறு எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரமான செயற்பாடு நிதிப்பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் சீர்செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கு எழுத்து மூலமான சான்றின்மை

| விடயம் | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| கணக்காய்விற்கு தகவல்கள் கிடைக்கப் பெறாமை | (அ) 2018 ஒக்தோபர் 03 ஆம் திகதிய பிஓஈ/பீ/ஏஈபீ/2018/18 மற்றும் பீஓஈ/பீ/ஏஈபீ/2018/18 (01) ஆம் இலக்க கடிதங்கள் மூலம் உத்தியோகத்தர்களிற்கான சம்பளக் கொடுப்பனவு தொடர்பில் தகவல் கோரப்பட்டிருந்தன. மேலும் 03 ஞாபகப்படுத்தல்கள் காலத்திற்கு காலம் வழங்கப்பட்டிருந்தன. எனினும், இவ்வறிக்கை வழங்கப்படும் திகதி வரையிலும் தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 42 ஆம் பிரிவின் பிரகாரம் இவ் அதிகாரச்சட்டத்தின் கீழ் செயலாற்றல் மற்றும் கடமைகளை ஆற்றும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவராவது நபரால் கோரப்பட்ட ஏதாவது தேவைப்பாடு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்ட அணுசக்தி சபையின் 4 உத்தியோகத்தர்கள் தொடர்பாக 2018 ஒக்தோபர் 08 ஆம் திகதிய பிஓஈ/பீ/ஏஈபீ/2018/18 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வேண்டப்பட்ட தகவல்கள் அதற்கான கோவைகள் காணாமல் போயிருந்ததன் காரணமாக கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | தற்போது அக் கோவைகள் தொடர்பாக புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மீண்டும் பதிலளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | - மேற்படி - |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பொது நிதிச் சுற்றறிக்கைகள் | | | |
| (i) | 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438(அ) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் (அ) பந்தி | 2017 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட 110 அகற்றப்படக்கூடிய பொருள் உருப்படிகள் அகற்றப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | பொது நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2017 யூலை 14 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 1,343,882 தொகையான 3 உள்ளூர் கொள்வனவு முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு 2018 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | பொது நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2019 மார்ச் 17 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | பொது நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) அரச கணக்குகள் சுற்றறிக்கை 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய 30/94 ஆம் அரச கணக்குகள் சுற்றறிக்கை | ரூபா 105,083,932 தொகையான 11 வெளிநாட்டு மானியங்கள் பொதுத் திறைசேரியின் ஊடாக பெற்றுக்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது சபைக்கு நேரடியாக பெறப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை | அரச கணக்குகள் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

செயற்பாட்டு விளைவு அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் ரூபா 1,456,454 மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 413,699 பற்றாக்குறையாக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,870,153 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கமா (GAMMA) நிலையத்தின் வருமானம் ரூபா 11,613,806 ஆலும் திறைசேரியிடமிருந்து கிடைத்த மீண்டுவரும் மானியம் ரூபா 8,150,000 ஆலும் உணவு மாதிரிப் பரிசோதனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 3,234,899 ஆலும் அதிகரித்திருந்த போதிலும் அழிவு எதிர்ப்புப் பரிசோதனைக்கான தேசிய நிலையத்தின் வருமானம் ரூபா 8,012,554 ஆல் குறைவடைந்திருந்த அதே நேரம் நிலையத்தின் செலவினம் போதியளவு குறைவடைந்திருக்காதமை இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளிற்கான இலங்கை அணுசக்தி சபையின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆண்டிற்கான ரூபா 20,985,774 தொகையான நிதிப் பற்றாக்குறை 2016 ஆம் ஆண்டில் ரூபா 3,864,974 மிகை வரை அதிகரித்திருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டில் மிகை ரூபா 1,456,454 தொகை வரை வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் இது மீளாய்வாண்டின் போது ரூபா 413,699 பற்றாக்குறை வரை வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளிற்கான ஊழியர் சம்பளச் சீராக்கங்களை கருத்தில் கொள்ளும் போது 2015 ஆம் ஆண்டிற்கான ரூபா 69,922,744 தொகையான சபையின் பங்களிப்பு 2018 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 120,459,832 தொகை வரை கிரமமாக அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அயனாக்கல் கதிர்வீச்சு நடவடிக்கைகளிற்காக பிரசித்தி பெறாததும் நகர்புறமல்லாத பொருத்தமான பிரதேசமான மஹேனவத்த, பிற்றிபானா, ஹோமாகமவில் அமைந்துள்ள 3 ஏக்கர் பரப்பளவான காணி அணுசக்திச் சபையை மீள | கருத்துரை வழங்கப்படவில்லை | நிதிப்பிரமாணம் 780 இன் பிரகாரம் பொது வேலைகள் மற்றும் சேவைகளை நிறைவேற்றும் போது சிக்கனம் மற்றும் வினைத்திறனிற்காக கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும் நிதிப்பிரமாணம் 128(1)(ஐ) இன் பிரகாரம் அத் திணைக்களத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவுவதற்கு மிகவும் பொருத்தமான இடமாக காணப்பட்ட போதிலும் உத்தியோகத்தர்களின் சௌகரியத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு இது நிராகரிக்கப்பட்டிருந்தது. பின்னர் இது தொடர்பில் பிரசித்தி பெற்ற பிரதேசமான மாலபேயில் அமைந்துள்ள காணியொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் பிரதேச குடியிருப்பாளர்களின் பாதுகாப்பு காரணமாக அக் காணியில் நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்தன. கட்டிட நிர்மாணங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக ரூபா 419,069,769 தொடக்கம் ரூபா 925,724,951 வரை ரூபா 506,655,182 ஆல் அதிகரித்திருந்தது. புதிய கட்டிடம் அமைந்திருந்த காணி மற்றும் மாலபே காணி மேற்படி நோக்கங்களிற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,420,846 தொகை முழு மதிப்பீட்டுக் கட்டணத் தொகையாக சபையால் செலுத்தப்பட்டிருந்தது. | | நடவடிக்கைகள் பொது வர்த்தக கொடுக்கல் வாங்கல்களில் எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், வினைத்திறன், தகுதித்தன்மை மற்றும் ஒருமைப்பாடு தொடர்பாக பொறுப்பேற்றுள்ளது என்பதை கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | சிரேஷ்ட மட்டத்திற்கு சொந்தமானதாக காணப்படாத பதவிகளின் சேவைக் காலப்பகுதியை கருத்தில் கொண்டு 2017 ஒக்தோபர் 01 தொடக்கம் 2019 மார்ச் 31 வரையான காலப்பகுதிக்கு 3 ஆண் உத்தியோகத்தர்கள் மற்றும் 5 பெண் உத்தியோகத்தர்களிற்கு ரூபா 675,000 தொகையான தொழில்சார் படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் இச் செயற்பாட்டை சீர்செய்வதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிக்கப்பட்ட விடயங்கள் மேலதிக படிமுறைகளிற்காக பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | தொழில்சார் படிகளை செலுத்தும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் நிதிப்பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் மேலதிகக் கொடுப்பனவை சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும. |

| | | |
|---|---|---|
| (இ) சபையின் மூன்று உத்தியோகத்தர்கள் உரிய காலப்பகுதிக்கு முன்னர் 05 ஆண்டுகள் தொடக்கம் 08 ஆண்டுகளில் சலுகை அடிப்படையில் முதலாவது மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை எடுத்திருந்ததுடன் 02 தொடக்கம் 04 ஆண்டுகளிற்கு முன்னர் இரண்டாவது அனுமதிப்பத்திரத்தை எடுத்திருந்தனர். இதற்கு மேலதிகமாக ஏனைய 5 உத்தியோகத்தர்கள் 01 ஆண்டு தொடக்கம் 06 ஆண்டுகளிற்கு முன்னர் அவர்களது முதலாவது அனுமதிப்பத்திரத்தை எடுத்திருந்தனர். நிதிப்பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் இதனை சீர்செய்வதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிக்கப்பட்ட விடயங்கள் மேலதிக படிமுறைகளிற்காக பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது உரிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் தவறுதலாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 128(1)(கி) இன் பிரகாரம் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும. |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2014 இன் 40 இலக்க இலங்கை அணுசக்தி அதிகாரச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை அணுசக்தி சபையின் குறிக்கோள்களில் ஒன்று அணுசக்தி பயன்பாட்டு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக கதிர்வீச்சியல் பாதுகாப்பு சேவைகளை வழங்குகின்றமை காணப்படுகின்றது. எனினும் மீளாய்வாண்டின் போது இது போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ரீஎல்டி அட்டைகளை (TLD Cards) பயன்படுத்தும் நிறுவனங்களால் thermo luminescence dosimeter அட்டைகளை அனுப்புவதிலுள்ள தாமதங்கள், ரீஎல்டி அட்டைகள் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதியின் பின்னர் தொடர்ந்துவரும் மாதத்தினுள் அவை அனுப்பப்படாமை, ரீஎல்டி வாசிப்பு இயந்திரங்களின் தரக் கட்டுப்பாட்டு பரிசோதனைகள் மற்றும் அளவுத்திருத்த நடவடிக்கைகள் மற்றும் புதிய கட்டிடத்திற்கு நிறுவனம் மாற்றப்பட்டமை காரணமாக புதிய ஆய்வுகூடத்தில் ரீஎல்டி வாசிப்பு இயந்திரங்களை நிறுவி அளவுத்திருத்தம் செய்வதற்கு சில காலம் எடுத்தல் போன்ற காரணிகள் குறித்த அட்டைகளை வாசித்தல் | அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக உரிய நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது வினைத்திறனாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் பெறுபேற்று அறிக்கைகளை வழங்குவதிலுள்ள குறிப்பிடத்தக்களவு தாமதத்திற்கு தாக்கமளித்திருந்தன. எனினும் வரையறுக்கப்பட்ட மனித வளங்களை கொண்டுள்ள நாட்டின் கதிர்வீச்சுப் பாதுகாப்பு சேவைகள் அனைத்தையும் வழங்குகின்ற பிரிவொன்றாக கதிர்வீச்சுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு உள்ளதுடன் குறித்த நிறுவனங்களின் தொழில்நுட்ப சவால்கள் மற்றும் தாமதங்களை எதிர்கொள்ளும் ரீஎல்டி சேவையை பெற்றிருந்த நிறுவனங்களிற்கு 2 மாதங்களினுள் கதிர்வீச்சு அளவை (dose) அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | |
| (ஆ) | 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்கள் முன்னாள் இலங்கை அணுசக்திச் சபையால் முறையாக செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 4,790,466 தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தண்டப்பணமாக செலுத்தப்பட வேண்டியிருந்தன. | அணுசக்தி சபையின் பதவியணியினரின் சார்பில் 1981 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிறுவனத்திடமிருந்து 15 சதவீதமும் ஊழியரிடமிருந்து 10 சதவீதமுமாக பங்களிப்பு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் கைத்தொழில் மற்றும் விஞ்ஞான அமைச்சால் வழங்கப்பட்ட 1981 யூன் 26 ஆம் திகதிய 312 ஆம் இலக்க சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தொழில்தருநரின் சதவீதம் 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 3:2 விலைவீதத்தில் பங்களிப்புக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வாளர் தலைமை அதிபதி 2011 மே 26 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவில் அறிவித்திருந்தார். அக் குழு இதனை சீர் செய்வதற்கு | ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புக்களை செலுத்தும் போது ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியதுடன் தண்டப்பணங்களை செலுத்தும் போது நிதிப்பிரமாணம் 128(1)(கி) பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிவவுறுத்தியிருந்ததுடன் முன்னைய காலப்பகுதி தொடர்பாக நிலுவைகளை செலுத்தும் போது உரிய தண்டப்பணங்களை செலுத்துமாறு தொழில் திணைக்களம் அறிவித்திருந்தது. எனினும் தற்போது சரியான பங்களிப்பு செலுத்தப்படுகின்றதுடன் எதிர்காலத்தில் அத்தகைய தவறுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (இ) | 2006 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டின் மே மாதம் வரையான காலப்பகுதிக்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் முறையாக செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக ரூபா 600,383 தொகை தண்டப்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. | தொழில் ஆணையாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் 1985 இன் 01 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் (திருத்திய) பிரகாரம் சம்பளத்திற்கு மேலதிகமாக அனைத்துப் படிகளிற்கும் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புக்கள் கணிப்பீடு செய்யப்பட வேண்டுமென அதிகாரசபையின் ஊழியர் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் அனைத்துப் படிகளையும் அடிப்படையாகக் கொண்டு பங்களிப்பை கணிப்பீடு செய்வதற்கு தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2007 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பங்களிப்புக்களை செலுத்தும் போது அக் காலப்பகுதிக்குரிய தண்டப்பணங்கள் செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் எதிர்காலத்தில் அத்தகைய தவறுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புக்களை செலுத்தும் போது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியதுடன் தண்டப்பணங்களை செலுத்தும் போது நிதிப்பிரமாணம் 128(1)(கி) பின்பற்றப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) தேசிய கமா நிலையத்தின் குறுகிய கால கதிர்வீச்சு வளங்களின் (short run Irradiation Sources) ஆகக் கூடிய இயலளவு 3000 kci ஆக காணப்பட்ட போதிலும் 250 kci இயலளவு மாத்திரமே நாளது வரை பயன்படுத்தப்பட்டிருந்தது. இது குறுகிய கால உற்பத்தி இயலளவின் 8 சதவீதம் மாத்திரமேயாகும். ஆகையால் உற்பத்தி இயலளவு குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிலவுகின்ற கேள்வியை பூர்த்தி செய்வதற்கு 250 kci இல் கதிர்வீச்சு வள இயலளவை மேற்கொள்ளுதல் போதுமானதாக இருந்தமையால் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் சந்தைக் கேள்வியை அதிகரித்ததன் பின்னர் ஆகக்கூடிய இயலளவை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 780 இன் பிரகாரம் பொது வேலைகள் மற்றும் சேவைகளை நிறைவேற்றும் போது சிக்கனம் மற்றும் வினைத்திறனிற்காக கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலும் நிதிப்பிரமாணம் 128(1)(ஐ) இன் பிரகாரம் அத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் பொது வர்த்தக கொடுக்கல் வாங்கல்களில் எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், வினைத்திறன், தகுதித்தன்மை மற்றும் ஒருமைப்பாடு தொடர்பாக பொறுப்பேற்றுள்ளது என்பதை கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஆ) ரூபா 9,184,390 கிரயத்தில் Isotope Ratio Mass Spectro Meter எனும் பெயரையுடைய உபகரணம் 2015 திசெம்பர் 02 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இது 2018 ஆகஸ்ட் 09 இல் சபைக்கு கிடைத்திருந்தது. எனினும் இவ் உபகரணம் 2019 ஏப்ரல் 30 வரையிலும் செயற்படும் நிலையில் காணப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | பொது வேலைகள் மற்றும் சேவைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், வினைத்திறன், தேவைப்பாடு மற்றும் ஒருமைப்பாட்டிற்காக முறையான கவனம் செலுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4(2) ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைத் திட்டம் மற்றும் விபரமான பெறுகைத் திட்டம் என்பன தயாரிக்கப்படாமல் ரூபா 100 மில்லியன் பெறுமதியான 39 பொருட்களிற்காக 2018 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் பெறுகைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டம் மற்றும் விபரமான பெறுகைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 6,175,788 பெறுமதியான மூலதன பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4(2)(3) ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைத் திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகைத் திட்டம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 50,964 மில்லியன் பெறுமதியான இருபத்தைந்து பொருட்களின் பெறுகை நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அப் பெறுகை நாளது வரை பூர்த்தி செய்யப்படாதிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் உரிய காலப்பகுதியினுள் பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த அழிவு எதிர்ப்பு பரிசோதனைக்கான தேசிய நிலையத்தின் திருத்திய மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 428,981,984 ஆகவும் அந் நிர்மாணத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 308,653,543 ஆகவும் இருந்தன. அதற்கிணங்க கிரய முரண் 39 சதவீதமாக இருந்தது. எனினும் 2012 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய 02/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாண மதிப்பீடு உரிய குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 42,533,542 செலவினத்திற்கான அங்கீகாரம் மொத்த முரணின் 35 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. | கருத்துரை வழங்கப்படவில்லை | உரிய அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தின் 10 சதவீதத்திற்கு மேல் ஏற்படக்கூடிய முரண் சந்தர்ப்பங்களின் போது மதிப்பீடுகளின் மீளாய்விற்கான முன்மொழிவுகள் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கைகள் மதிப்பீடு பரீட்சிக்கும் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு அரச நிதிப் பணிப்பாளரிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்த | கருத்துரை வழங்கப்படவில்லை | சபையின் நிதிக்கூற்றுக்கள் உரிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை |

| | | |
|---|---|---|
| பின்னர் 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையால் நிதிக்கூற்றுக்கள் 48 நாட்கள் தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | | அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயலாற்றல் குறிகாட்டிகளை அடைந்துகொள்வது தொடர்பாக யதார்த்தமான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (i) அழிவு எதிர்ப்பு பரிசோதனைக்கான தேசிய நிலையம் மற்றும் சபையின் பௌதீக ரீதியான செயலாற்றல் மற்றும் நிதிச் செயலாற்றலை ஒப்பீடு செய்த போது பொருண்மையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.<br>(ii) எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் கமா நிலையத்தால் பேணப்பட்டிருக்காததால் உள்ளபடியான செயற்பாடுகள் எதிர்பாாக்கப்பட்ட மட்டத்தை விட உயர்வான மட்டமொன்றில் காணப்பட்டது. | ஆரம்பத்தில் அழிவு எதிர்ப்பு பரிசோதனைக்கான தேசிய நிலையம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மிகை மதிப்பீட்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இது திருத்தம் செய்யப்பட்டிருந்தது. செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வாழ்க்கை விஞ்ஞானப் பிரிவின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவை தொடர்பான செயன்முன்னேற்றத்தை காட்டும் போது பிழையான பெறுமதி நிதிச் செயலாற்றலின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயலாற்றல் குறிகாட்டிகளின் இலக்குகளை அடைந்துகொள்ளுதல் யதார்த்தமாக திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகள் போதியளவில் அடைந்துகொள்ளப்படாமை | | |
| (i) மீளாய்வாண்டின் போது அழிவு எதிர்ப்பு பரிசோதனைக்கான தேசிய நிலையத்தின் சான்றிதழ் கற்கைநெறிகள், செயலமர்வுகள் மற்றும் அழிவு எதிர்ப்பு பரிசோதனை பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பில் செயலாற்றலின் உள்ளபடியான நிதிச் செயன்முன்னேற்றம் திட்டமிடப்பட்ட மட்டத்தின் 50 சதவீதத்தை விடக் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | திருத்திய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட தொகையுடன் உள்ளபடியான தொகையை ஒப்பிடும் போது நிதிச் செயலாற்றலில் முன்னெற்றமொன்றை காட்டுகின்றது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் போதியளவு எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வாழ்க்கை விஞ்ஞானப் பிரிவின் கமா ஸ்பெக்ரோமெட்ரி (GAMMA Spectrometry) மூலம் வழங்கப்பட்டிருந்த பகுப்பாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் தொடர்பாக இலக்குகளை அடைந்துகொள்ளுதலின் செயன்முன்னேற்றம் 36 சதவீதத்தை விடக் குறைவாக இருந்தது. | சரியான நிதிச் செயலாற்றலின் உள்ளபடியான தொகையின் பிரகாரம் பகுப்பாய்வுச் சேவைப் பிரிவின் நடவடிக்கைகளின் இலக்குகளை அடைந்துகொள்ளுதல் எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமான செயன்முன்னேற்றத்தை காட்டுகின்றது. | |
| (இ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் குறித்த சில இலக்குகள் பூர்த்தி செய்யப்படாமை<br>------------------------------------------------------ | | |
| (i) | வாழ்க்கை விஞ்ஞானப் பிரிவின் கமா ஸ்பெக்ரோமெட்ரி (GAMMA Spectrometry) மூலம் வழங்கப்பட்டிருந்த பகுப்பாய்வுப் பிரிவின் பின்வரும் நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.<br>• புதிய பகுப்பாய்வு முறைமைகளை நிறுவுதல் மற்றும் நோக்கெல்லையின் விஸ்தரிப்பு<br>• பெறப்பட்ட தகவலின் மாதிரிப் பகுப்பாய்வு<br>• தகவல் பகுப்பாய்வு மற்றும் மொழிபெயர்ப்பு | புதிய பகுப்பாய்வு முறைமைகளை நிறுவுவதற்காக கியூ3 மற்றும் கியூ4 காலவீச்சினுள் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் அத்தகைய வேலைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். தேவை ஏற்பட்டிருக்காததால் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | அணுசக்தி விவசாயப் பிரிவின் பின்வரும் நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.<br>• அடையாளக் கூறுகளின் (trace elements) மாதிரிப் பகுப்பாய்வு<br>• சந்தையிலிருந்து மாதிரிகளை சேகரித்தல்<br>• அவ் மாதிரிகளை தயாரித்தல் மற்றும் நிலையான ஐசோரோப் (stable isotope) இற்காக பகுப்பாய்வு செய்தல்.<br>• பால் மாவினுள் (milk powder) தேவையற்ற பொருட்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததா என்பதை தேடுவதற்காக சுவைத்தல் (tastings) (Urea, Formalin, preservatives) | கருத்துரை வழங்கப்படவில்லை | |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கமா கதிர்வீச்சுப் பொறியை நிறுவி கதிர்வீச்சு சேவைகளின் கீழ் விவசாய விதைகளின் கதிர்வீச்சு மற்றும் நீர்க்களி உற்பத்தி (hydrogel production) போன்ற சேவைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அத்தகைய சேவைகள் 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டிருந்த நீர்க்களி உற்பத்திகளின் ஆய்வுகூட நடவடிக்கைகள் பழைய கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஆய்வுகூட நடவடிக்கைகள் மெதுவாக இருந்தன. ஆகையால் அந் நடவடிக்கை 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக புதிய ஆய்வுகூடங்கள் நிறுவப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சேவைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்கான கமா நிலையத்தின் கதிர்வீச்சு சேவைகள் வருமானத்தின் 98 சதவீதம் முன்னைய ஆண்டுகளை போல் ஒரு வழங்குனரில் தங்கியுள்ளது. எனினும் கமா நிலையத்தின் கதிர்வீச்சு சேவைகளை பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களின் சந்தைப் பங்கை அதிகரிப்பதற்கு 2018 – 2020 கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் முறையான நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | கமா நிலையத்தின் சேவைகளை தற்போது பெற்றுக்கொள்ளும் பிரதான நிறுவனம் அரசாங்க வைத்தியசாலைகளிற்கு அறுவைச் சிகிச்சை கையுறைகளை வழங்குவதற்காக எமது சேவைகளை பெற்றிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக புதிய வழங்குனர்களை தேடுவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது தொடர்பில் தேவையான படிமுறைகள் எடுக்கப்படுகின்றன. | வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக முறையான நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட வேண்டியதுடன் கூட்டிணைந்த/ செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இது உள்ளடக்கப்பட வேண்டும். |

### 4.3 ஆண்டறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் இறுதி ஆண்டறிக்கை ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்த பின்னர் தொடர்ந்துவரும் 10 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிற்கான அணுசக்தி சபையின் ஆண்டறிக்கை 2019 ஏப்ரல் 30 வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஆண்டறிக்கை உரிய காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.4 முகாமைத்துவ அறிக்கைக்கு பதிலளித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(8) ஆம் பிரிவின் 7 ஆம் உபபிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஆளுகை சபையால் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு கருத்தில் கொள்ளப்பட்ட பின்னர் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய முன்மொழியப்பட்ட படிமுறைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைத் திகதியிலிருந்து 3 மாதங்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.<br><br>எனினும் 2018 ஒக்தோபர் 09 இல் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைக்கான பதில்கள் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் சபையால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைக்கான பதில்கள் உரிய காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.5 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(உ) பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக சபைக்கு வழங்கப்பட்ட 23 கணக்காய்வு ஐயவினாக்களில் 10 ஐயவினாக்களிற்கான பதில்கள் 2019 ஏப்ரல் 30 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்காதமை மற்றும் 7 கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியை விஞ்சி 10 நாட்கள் தொடக்கம் 64 நாட்கள் வரையான தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(உ) பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும். |

### 4.6 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(01) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து உள்ளகக் கணக்காய்வு பிரிவுகளும் அதன் நிறுவனங்களிற்கு ஒவ்வொரு காலாண்டிற்கும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையை தயாரிக்க வேண்டியதுடன் அவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கலந்துரையாடலிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மீளாய்வாண்டிற்காக அத்தகைய காலாண்டு அறிக்கைகளை தயாரித்திருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | உரிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.7 கணக்காய்வுக் குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஒவ்வொரு 3 மாதங்களிற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது சபையால் 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. 2018 யூன் 19 தொடக்கம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் திகதி வரை 10 மாதங்களிற்கு மேற்பட்ட காலப்பகுதி கடந்திருந்த போதிலும் அக் காலப்பகுதியினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சில தவிர்க்க முடியாத காரணங்களினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட முடியாதிருந்ததுடன் சபையின் புதிய தலைவரொருவர் மற்றும் பணிப்பாளரொருவர் நாளதுவரை நியமனம் செய்யப்பட்டிருந்தமையால் அக் கூட்டம் அண்மையில் நடாத்தப்பட முடிந்திருந்தது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் பட்டியலிடப்பட்டவாறு நடாத்தப்பட வேண்டும். |

### 4.8 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அரசாங்க நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அமுல்ப்படுத்துதல் தொடர்பான அக்கறை கொண்டுள்ள | நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் தரவுத்தளம் ஒன்றை உருவாக்குவதற்கும் அது |

| | | | |
|---|---|---|---|
| | தரப்பினர்களாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | | தொடர்பாக அக்கறை கொண்டுள்ள சபையின் உத்தியோகத்தர்கள்/ தரப்பினர்களை அறிவூட்டுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகளிற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பான முறைமையொன்று நாளதுவரை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் முறைமையொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். | |
| (இ) | ஏதாவது நடவடிக்கையின் சரியான செயலாற்றலை அளவீடு செய்வதற்காக சரியான தரவுத்தளமொன்று பேணப்பட வேண்டிய போதிலும் சபையால் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதை அளவீடு செய்வதற்காக தரவுத்தளமொன்று உருவாக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென நான் அறிவிப்பதற்கு விரும்புகின்றேன். | |
| (ஈ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்ககளை அடைந்துகொள்வதற்கான வளங்கள் மற்றும் இயலளவை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள முடியாத ஆபத்து இனங்காணப்பட்டிருந்தது. முறையான அமுல்ப்படுத்தல் திட்டமொன்றை தயாரிப்பதற்கும் உத்தியோகத்தர்களை அறிவூட்டுவதற்கும் அவ் ஆபத்தை குறைக்கும் வகையில் தேவையான சீராக்கங்கள் மற்றும் தீமானங்களை அமுல்ப்படுத்துவதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கும் கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவன முகாமைத்துவத்தின் தலையீடு போதியளவில் இருக்காதமை காணப்பட்டதுடன் அமைச்சிற்கு அறிவிக்கும் அத்தகைய நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | |